உறுப்பினர் சொன்னார்கள். தேனீகளுக்கு நோய் வந்தது உண்மைதான். ஆனால், எந்த நோய் என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. பூனாவில் இருக்கக்கூடிய தேனீ ஆராய்ச்சி மையத்திலிருந்துகூட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து நாங்கள் ஆராய்ச்சி மேற்கொண்டபோது, அதற்கு என்ன நோய் தாக்கியிருக்கிறது என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் நாங்கள் இன்னும் முயற்சி எடுத்து வருகிறோம். சைனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட அந்தத் தேனீக்களை கல்வராயன் மலைப் பகுதியிலே அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டபோது, சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிவித்தார்கள். ஆகவே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

250—

துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தைச் செப்பனிடுதல்.

20667—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், துத்திகுளம் நீர்ப்பாசனக் குளத்தை தூர் வாரிச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுக்கா கீழப்பாவூர் ஒன்றியம் துத்திக்குளம் கண்மாயினை தூர் எடுத்தலுக்கான மதிப்பீடு ரூ. 31.65 இலட்சங்களுக்கு (93-94 விலை விவரப்படி) தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

257—

விளாத்திக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்.

37906—திருமதி என். கனகவல்லி :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1995 ஏப்ரல் 6

(அ) விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் கட்டிட மதிப்பீட்டில் 50% செலுத்த முன்வருமானால் அரசு தன் பங்காக 50% தொகையை செலுத்தி நடப்பு நிதியாண்டில் கூடுதல் கட்டிடம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) திருவிடைமருதூர் அருகில் உள்ள காவிரி பாலம் செப்பனிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். ஆசைமணி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் அருகில் சென்ற ஆண்டு உடைந்த காவிரி பாலம் செப்பனிடப்படாததால் அப்பகுதி மக்கள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.